தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சென்னை மாநகராட்சி - பெரியார் ஈ.வெ.ரா சாலையிலிருந்து ஓவியக் கல்லூரிக்கு எதிர்புறம் பிரியும் அட்கின்சன் சாலைக்கு ''ஜோதி வெங்கடாசலம் சாலை'' என்று பெயர் மாற்றம் செய்திட சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது,

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 1) துறை

அரசாணை (இ) எண் 106 நாள் 25.10.99

படிக்க: -

1)அரசாணை (நிலை) எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந

துறை நாள் 30.6.98

2)சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை 3 கடிதம் நிமஉது நக எண்

எஸ்சி 3/ 625/99 நாள் 4.5.99

*******

ஆணை: -

1.மேலே படிக்கப்பட்ட அரசாணையில் சாலைகள் மற்றும் தெருக்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள் ஆகியவற்றிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கோ அல்லது பெயர் சூட்டுவதற்கோ மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அரசிற்கு முன்மொழிவினை அனுப்புவதை தவிர்க்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2.மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் பெருந்தலைவர் ராஜாஜி, பக்தவச்சலம், காமராஜர் போன்றவர்களின் ஆட்சிக் காலத்தில் மதுவிலக்கு, சுகாதாரம் போன்ற முக்கியத் துறைகளின் அமைச்சராகவும், கேரள மாநில ஆளுனராகவும் பணிபுரிந்து தொண்டாற்றிய திருமத ஜோதி வெங்கடாசலம், அவர்களது பெயரினை ஈ.வெ.ரா சாலையிலிருந்து ஓவியக் கல்லூரிக்கு எதிர்புறம் பிரியும் அட்கின்சன் சாலைக்கு ஜோதி வெங்கடாசலம் சாலை என பெயர் சூட்டுமாறு திருப்பூர் எல்ஆர்ஜி கலைக்கல்லூரியின் முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார். சென்னை

மாநகராட்சி மன்றமும் இதற்கு அனுமதி அளித்துள்ளது எனவும், எனவே ஈ.வெரா சாலையிலிருந்து ஓவியக் கல்லூரிக்கு எதிர்புறம் பிரியும் அட்கின்சன் சாலைக்கு ஜோதி வெங்கடாசலம் சாலை என பெயர் மாற்றம் செய்ய அனுமதி அளிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3,சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தபின் சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவையும் அது குறித்த சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானத்தையும் ஏற்று அரசாணை (நிலை) எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.6.99 லிருந்து விலக்களித்து 1919 சென்னை மாநகராட்சி சட்டம் விதி எண் 228 ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி பெரியார் ஈ.வெரா சாலையிலிருந்து ஓவியக் கல்லூரிக்கு எதிர்புறம் பிரியும் அட்கின்சன் சாலைக்கு ஜோதி வெங்கடாசலம் சாலை என பெயர் மாற்றம் செய்திட சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து இவண் ஆணை வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.மாலதி

அரசுச் செயலாளர்

பெறுநர்

ஆணையர் சென்னை மாநகராட்சி, சென்னை 3 (மேயர் மூலமாக).
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை 9.
அரசுச் செயலர், பொதுத் துறை, சென்னை 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பொது) துறை,. சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்